ஜய ஜய ஶங்கர ஹர ஹர ஶங்கர



ஸ்ரீ வேத வ்யாஸாய நமஃ

ஸ்ரீ ஶங்கர பகவத்பாதாசார்ய பரம்பராகத

மூலாம்நாய ஸர்வஜ்ஞ பீடம்

**ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம் ஸ்ரீமடம் ஸம்ஸ்தானம்**

# வேத தர்ம ஶாஸ்த்ர பரிபாலன ஸபை

கும்பகோணம் (1942)

# பிலவ வருடத்திய மகர ஸங்க்ரமண புண்ய கால அனுஷ்டான நிர்ணயம்

(வித்வத் ஸபையோரின் கருத்துகளின் அடிப்படையில் தொகுத்தது – வேத பாஷ்ய ரத்னம் ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண ஶர்மா)

ஸ்ரீ காஞ்சீ காமகோடி மூலாம்நாய ஸர்வஜ்ஞ பீடத்தின் ஸ்தாபனமாகிய வேத தர்ம சாஸ்த்ர பரிபாலன ஸபை மூலமாக கடந்த 26-டிச-2021 அன்று நடந்த தர்ம ஶாஸ்த்ர ஸதஸ்ஸில் பிலவ வருஷ (2022) மகர ஸங்க்ரமண புண்ய காலம் குறித்து விசாரம் செய்யப்பட்டது. தமிழ்நாட்டில் பிரதானமாக வழக்கத்தில் உள்ள ஸ்ம்ருதி முக்தாபலம் என்ற தர்ம ஶாஸ்த்ர

நூலின்படி அந்த ஸதஸ்ஸில் தீர்மானமான விஷயத்தின் விரிவான விளக்கம் இந்த கோப்பில் அளிக்கப்படுகிறது.

## திருக்கணிதப்படி

| **போகி** | **பொங்கல்** | **கனு, மாட்டுப்பொங்கல்** |
|---|---|---|
| ஜன 13 | **ஜன 14** | ஜன 15 |

| | |
|---|---|
| ஸங்க்ரமண நேரம் | ஜன 14, பிற்பகல் 2:30 |
| தர்ப்பண நேரம் | ஜன 14, பிற்பகல் 2:30 |
| பொங்கல் பானை நேரம் | ஜன 14, பிற்பகல் 2:00~3:15 |

## வாக்கியப்படி - 1

தெற்கு தமிழ்நாடு, தெற்கு கர்நாடகம், கேரளம்
(விவரம் மேலே பார்க்க)

| **போகி** | **பொங்கல்** | **கனு, மாட்டுப்பொங்கல்** |
|---|---|---|
| ஜன 13 | **ஜன 14** | ஜன 15 |

| | |
|---|---|
| ஸங்க்ரமண நேரம் | ஜன 14 அஸ்தமனத்திற்கு முன்பு |
| தர்ப்பண நேரம் | ஜன 14, பிற்பகல் 12:30 க்கு மேல்* |
| பொங்கல் பானை நேரம் | ஜன 14, பிற்பகல் 12:30 க்கு மேல்* |

* = இயன்றவரை தாமதித்து செய்வது உத்தமம்

## வாக்கியப்படி - 2

வடக்கு தமிழ்நாடு, வடக்கு கர்நாடகம், பிற மாநிலங்கள்
(விவரம் மேலே பார்க்க)

| **போகி** | **பொங்கல்** | **கனு, மாட்டுப்பொங்கல்** |
|---|---|---|
| ஜன 14 | **ஜன 15** | ஜன 16 |

| | |
|---|---|
| ஸங்க்ரமண நேரம் | ஜன 14 அஸ்தமனத்திற்கு பிறகு |
| தர்ப்பண நேரம் | ஜன 15, காலை 6:45 முதல்* |
| பொங்கல் பானை நேரம் | ஜன 15, காலை 7:45~9:30 |

* = இயன்றவரை சீக்கிரம் செய்வது உத்தமம்

வயது முதிர்ச்சி அல்லது ஆரோக்யக் குறைவு காரணமாக குறித்த நேரம் வரை ஆஹாரமின்றி காத்திருக்க இயலாதவர்கள் இயன்றவரை ஸங்க்ரமணத்திற்கு நெருங்கி காத்திருந்து அனுஷ்டானங்களை செய்ய வேண்டும்.

## விவரங்கள்

### திருக்கணிதப்படியான நிர்ணயம்

14-ஜனவரி-2022 அன்று லாஹிரி அயனாம்ஶத்தின்படி சுமார் பிற்பகல் 2:30 மணிக்கு ஸங்க்ரமணம் அதாவது மாதப்பிறப்பு ஏற்படுகிறது. ஆகவே சந்தேகம் மாறுதல் எதுவும் இன்றி **திருக்கணிதம் பின்பற்றுவோர் அனைவருக்கும் ஜனவரி 14 ம் தேதி அன்றே புண்ய காலம் ஆகும்.**

இதனால் 13 ம் தேதி போகி, 14 ம் தேதி பொங்கல், 15 ம் தேதி கனு, மாட்டுப்பொங்கல் என்று ஆகிறது.

14 ம் தேதி (2:30 மணிக்கு) **ஸங்க்ரமணம் ஆன பிறகு புண்ய கால ஸ்நானம், தானம், தர்ப்பணம் செய்ய வேண்டும்.** மேலும் இச்சமயம் பொங்கல் பானை வைத்து அது பொங்குவதற்குள் சூரிய நாராயண பூஜை செய்து அந்த பொங்கலை நைவேத்யம் செய்ய வேண்டும்.

அந்த நேரத்தில் ராஹுகாலம் யமகண்டம் முதலிய இடையூறுகள் யாதும் இல்லாததால் இப்படியே செய்யலாம்.

## வாக்கியப்படி பொது நிர்ணயம்

வாக்கிய கணிதத்தில் 14-ஜனவரி-2022 அன்று மாலை சூரியன் மறைவதற்கு நெருங்கி ஸங்க்ரமணம் ஏற்படுவதால் மேலும் விசாரித்து தெளிவுபடுத்த வேண்டி உள்ளது.

சில ஊர்களில் சூரியன் மறைவதற்குள் ஸங்க்ரமணம் ஏற்படுவதால் அவ்விடங்களில் அன்றே புண்ய காலம் ஆகும். மற்ற ஊர்களில் சூரியன் மறைந்த பிறகு ஸங்க்ரமணம் ஏற்படுவதால் அவ்விடங்களில் மறுநாள் புண்ய காலம் ஆகும்.

அவரவர்கள் வசிக்கும் ஊருக்கு என்று கணிக்கப்பட்ட பஞ்சாங்கங்களைப் பயன்படுத்துவது இத்தகைய விஷயத்தில் மிகவும் உதவும் என்பதில் ஐயமில்லை. ஆனால் அனைத்து ஊர்களுக்கும் பஞ்சாங்கங்கள் கணிக்கப்படுவதில்லை என்பதால் ஜகத்குருவான நமது ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதிகளின் உத்தரவின்படி **அனைத்து ஊர்களுக்குமான நிர்ணயம் தற்சமயம் பின்பற்றப்படும் வாக்கிய முறைப்படி கீழே கொடுக்கப்படுகிறது.**

## வாக்கியப்படி தமிழ்நாட்டில் நிர்ணயம்


தமிழ்நாட்டை இந்த விஷயத்தில் மூன்று பகுதிகளாகக் கருத வேண்டி உள்ளது –

1) **வடக்கு மாவட்டங்கள்** – சென்னை, திருவள்ளூர், வேலூர், இராணிப்பேட்டை, காஞ்சிபுரம்.

இவற்றில் 14ம் தேதி சூரியன் மறைந்த பிறகு ஸங்க்ரமணம் ஏற்படுவதால் மறுநாள் அதாவது **15ம் தேதி புண்ய காலம் ஆகும்.**

## தமிழ்நாட்டு மாவட்டங்களின் வரைபடம்

(இதில் கிருஷ்ணகிரி வழியாக செல்லும் கோட்டை கவனிக்க)




நன்றி -

https://ta.wikipedia.org/wiki/தமிழ்நாட்டின்_மாவட்டங்கள்

2) **தெற்கு மாவட்டங்கள்** – தர்மபுரி, கள்ளக்குறிச்சி, விழுப்புரம், புதுச்சேரி(*), கடலூர், பெரம்பலூர், சேலம், ஈரோடு, நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், கரூர், நாமக்கல், திருச்சிராப்பள்ளி, அரியலூர், மயிலாடுதுறை, காரைக்கால்(*), நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, திண்டுக்கல், தேனி, மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர், தென்காசி, தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி. (* = அரசாங்க ரீதியில் வேறு மாநிலம்)

இவற்றில் 14ம் தேதி சூரியன் மறைவதற்கு முன்பு ஸங்க்ரமணம் ஏற்படுவதால் அன்றே அதாவது **14ம் தேதி புண்ய காலம் ஆகும்.**

3) **இடைப்பட்ட மாவட்டங்கள்** – செங்கல்பட்டு, திருவண்ணாமலை, திருப்பத்தூர், கிருஷ்ணகிரி.

இவற்றில் தெற்கு புறம் உள்ள இடங்களில் 14ம் தேதியும் வடக்கு புறம் உள்ள இடங்களில் 15ம் தேதியும் மகர ஸங்க்ரமண புண்ய காலம் ஆகும் –

| | |
|---|---|
| **14ம் தேதி** | கல்பாக்கம், மதுராந்தகம், மேல்மருவத்தூர், வந்தவாசி, போளூர், திருவண்ணாமலை, செங்கம், திருப்பத்தூர், ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி, தேன்கனிக்கோட்டை |
| **15ம் தேதி** | மாமல்லபுரம், செங்கல்பட்டு, உத்திரமேரூர், செய்யாறு, ஆரணி, வாணியம்பாடி, ஜோலார்பேட்டை, ஓசூர் |

இதே போல் கர்நாடகத்திலும் கேரளத்திலும் ஆகிறது –

## வாக்கியப்படி கர்நாடகத்தில் நிர்ணயம்

| | |
|---|---|
| **14 ம் தேதி** | கொள்ளேகால, மண்ட்ய, பாண்டவபுர, மைஸூரு, க்ருஷ்ணராஜநகர, ஹுணஸூரு, மடிகேரி ஆகிய தெற்கு பகுதிகள் |
| **15 ம் தேதி** | பெங்களூரு, கனகபுர, ராமநகர, மேலுகோட்டெ, ஸோமவாரபேட்டெ, ஸுப்ரஹ்மண்ய, ஸுள்ய, புத்தூரு, மங்களூரு முதலிய கர்நாடகத்தின் எஞ்சிய அனைத்து பகுதிகளும் |

## வாக்கியப்படி கேரளத்தில் நிர்ணயம்

| | |
|---|---|
| **14 ம் தேதி** | காஸர்கோடு ஆரம்பித்து அதற்கு தெற்கே உள்ள அனைத்து பகுதிகளும் |
| **15 ம் தேதி** | படியடுக்க, கும்பள, மஞ்சேஶ்வரம் |

## வாக்கியப்படி பிற மாநிலங்களில் நிர்ணயம்

| | |
|---|---|
| **15 ம் தேதி** | தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம் தவிர பாரதத்தின் மற்ற அனைத்து மாநிலங்களும் |

ஷை அட்டவணைகளிலிருந்து புண்ய கால நிர்ணயத்தை அறிந்து, இந்த கோப்பின் தொடக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள மற்ற அட்டவணைகளைப் பார்த்து அந்தந்த ஊர்களில் மகர ஸங்க்ரமணத்தை முன்னிட்ட சகல அனுஷ்டானங்களின் நேரங்களை அறிந்துகொள்ளத்தக்கது.

## ஏன் இரு விதமான பிரித்த நிர்ணயம்?

இது வரை இவ்வாறு ஊர் வாரியாக பொங்கலை பிரித்து கொண்டாடியதில்லையே, இப்போது ஏன் என்ற ஐயம் எழலாம். ஆனால் இதில் கவனிக்கவேண்டிய சில அம்சங்கள் உள்ளன.

பழங்காலத்தில் மக்கள் சொந்த ஊரிலிருந்து தூர தேசத்தில் சென்று வசிப்பது அரிதாக இருந்தது. மேலும் அந்தந்த ஊர்களில் உள்ள பஞ்சாங்கங்களை அனுஷ்டிப்பர்.

தற்சமயம் தூர தேசத்திற்கு சென்று வசிப்பவர்கள் தமது பூர்வீக ஊர்களுக்கான பஞ்சாங்கங்களை பயன்படுத்துவதில் குழப்பங்கள் ஏற்படுகின்றன. ஏனெனில் சாஸ்த்ரமானது அந்தந்த ஊர்களின் சூரிய உதயம் அஸ்தமனம் முதலியவற்றை முன்னிட்டே அனுஷ்டானம் செய்வதற்கான நாட்களையும் நேரங்களையும் நிர்ணயித்துக் கொடுக்கிறது. ஆகவே அந்தந்த ஊர்களுக்கான பஞ்சாங்கங்களின்படியே அந்தந்த ஊர்களில் அனுஷ்டானம் செய்வது சரியாகும்.

இரண்டாவதாக அந்த காலத்தில் இன்றைய இணைய ஊடக அமைப்புகள் இல்லாததால், அந்தந்த ஊர்களில் அந்தந்த ஊர் பஞ்சாங்கப்படி விவாதமின்றி அனுஷ்டித்து வந்தனர். தற்சமயம் பல ஊர்களுக்கும் உடனுக்குடனே தகவல் பரிமாற்றம் ஏற்படுவதால் ஏன் அங்கே முதல் நாள் இங்கே மறு நாள் என்பது போன்ற கேள்விகள் எழும்புகின்றன.

ஆனால் சாஸ்த்ரமாகிய வழிகாட்டியை தெளிவுற பின்பற்றுபவர்களுக்கு அந்தந்த ஊர்களில் அனுஷ்டானம் இப்படி இப்படித்தான் செய்ய வேண்டும் என்ற நிர்ணயம் ஏற்படுவதால் குழப்பமின்றி அவ்வாறே செய்து பகவானின் க்ருபைக்கு பாத்திரமாவோமாக.

-*-